1979 ஏப்ரல் 30]

எளிதாக அணுகக்கூடியவராக இருப்பார். தாசில்தார்கள் போன்றவர்களிடம் இதை விட்டால் இழுத்து அடிக்கக் கூடிய நிலைமை வரும், ஊராட்சிமன்றத் தலைவர்கள் மக்களுக்குப் பொறுப்பானவர்கள் என்ற காரணத்தால் இப்படி ஆணை யிட்டிருக்கிறோம்.

கல்லாற்றின் குறுக்கே பாலம்

*வினா எண் 881—திரு. எஸ். வி. இராமசாமி : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருச்சி மாவட்டம், பெரம்பலூர் வட்டம் அரும்பா வூரிலிருந்து கிருஷ்ணாபுரம் வழியே செல்லும் நெடுஞ்சாலையில் கல்லாற்றின் குறுக்கே பாலம் ஒன்று கட்ட அரசு உத்தேசித் துள்ளதா ?

(ஆ) ஆம் எனில், வேலை எப்பொழுது தொடங்கப்படும்?

திரு. ப. கோ. கிட்டு (அமைச்சரின் பேரவை செயலர்) :

(அ) & (ஆ) அரசின் பரிசீலனையில் உள்ளது.

திரு. எஸ். வி. இராமசாமி : பேரவைத் தலைவர் அவா களே, இதனுடைய மதிப்பு எவ்வளவு, எப்போது இது கட்ட துவங்கப்படும் என்று அறிவிக்க இயலுமா ?

திரு. ப. கோ. கிட்டு (அமைச்சரின் பேரவை செயலர்) : தலைவர் அவர்களே, மேற்கண்ட இந்த பாலமானது 1979—80 ஆம் ஆண்டு பாகம் இரண்டு திட்டத்திலே சேர்க்கப்பட வேண்டு மென்று தலைமைப் பொறியாளர் அரசுக்குப் பரிந்துரை செய் திருக்கிறார். இந்த பாலம் 6 லட்ச ரூபாய் தோராய மதிப்பிலே செய்யப்படும் என அறிவிக்கப்படுகிறது. இந்தத் திட்டம் இரண் டாம் பாகத் திட்டத்திலே மேற்கொள்வதற்கான வேலைகள் அரசினுடைய பரிசீலனையில் இருந்து கொண்டிருக்கின்றன.

முஸ்குந்தா நதியின் குறுக்கே அணை

*வினா எண் 882—திரு. துரை முத்துசாமி : மாண்புமிகு வேளாண்மை பாசனத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக் களுக்கு விடையளிப்பாரா—

(அ) சங்கராபுரம் தொகுதியில் உள்ள லக்கி நாயக்கன் பட்டி அருகில் உள்ள முஸ்குந்தா நதியின் குறுக்கே அணைக்கட்ட அல்லது (Percolation Tank) கட்ட செயற்குறிப்பு ஏதேனும் உண்டா ?

(ஆ) ஆம் என்றால், விபரம் என்ன ?